[Limited Sharing]

# ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2023.02.06 |

## நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பான ஒழுங்குவிதிகள்

இலங்கை மத்திய வங்கியால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிதியியல் நிறுவனங்கள் மூலம் பணிகளை வழங்கும் போது நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பை நிறுவனமயப்படுத்துவதற்கான தேவையை இனங்கண்டு, இலங்கை மத்திய வங்கியால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்துவதை இலக்காகக்கொண்டு, இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் அனைத்தையுமுள்ளடக்கிய புதிய ஒழுங்குவிதிகளைக் கொண்ட தொகுதியொன்றை உருவாக்கியுள்ளது. இவ்வொழுங்குவிதிகள், சந்தை நடத்தை மேற்பார்வைக்கு வசதியளிக்கின்ற அதேவேளை நிதியியல் வாடிக்கையாளர்கள் தொடர்ந்து முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கான தேவையினை குறைப்பதனை இலக்காகக்கொண்டு, நிதியியல் பணிகளை வழங்குதல்/ பெற்றுக்கொள்ளல் என்பவற்றில் கருத்திற்கொள்ளப்படவேண்டிய விடயப்பரப்புக்கள் பற்றி பணி வழங்குநர்கள் மற்றும் பெறுநர்கள் இருவருக்குமான தெளிவினை வழங்குவதற்கு குறித்த ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையாளர்களுக்கென அதிகாரங்களை வரையறைசெய்யும் என எதிர்பார்க்கின்றன.

பரந்தளவிலான ஆர்வலர் ஆலோசனையைக் கொண்டிருக்கும் பொருட்டு, வரைவு ஒழுங்குவிதிகள் மீதான தமது அவதானிப்புக்களை/கருத்துக்களை/ஆலோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு தொடர்புபட்ட தொழிற்றுறை அமைப்புக்களுக்கும் பொதுமக்களுக்கும் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் வலைத்தளத்தில் கிடைக்கத்தக்க வரைவு ஒழுங்குவிதிகளை (ஆங்கிலம்) (வரைவு ஒழுங்குவிதிகளுக்கான வலைத்தள இணைப்பு: consultation_paper_20230120_regulations_on_financial_consumer_protection_e.pdf (cbsl.gov.lk)) பொதுமக்கள் அணுகலாம் என்பதுடன் தமது அவதானிப்புக்கள்/கருத்துக்கள்/ஆலோசனைகள் என்பவற்றை பின்வருவன வாயிலாக 2023.02.17 அன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பலாம்.

அஞ்சல் முகவரி : நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம்,
இல.30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01.

தொலைநகல் : +94 112477744

மின்னஞ்சல்: fcrd@cbsl.lk